# சைவநெறி

## முதலாம் தவணை

# தரம் 1

முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித்துறை,
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்,
இலங்கை.
www.nie.ac.lk

அச்சிடுதல் மற்றும் விநியோகம் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

சைவநெறி

முதலாம் தவணை

தரம் 01

முதலாம் பதிப்பு: 2025

© தேசிய கல்வி நிறுவகம்
முழுப்பதிப்புரிமையுடையது
ISBN: 978-624-6792-24-4

முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித்துறை,
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்,
இலங்கை.
www.nie.ac.lk

*இந்நூல் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்
அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தில்
அச்சிடப்பட்டது.*

Published by : National Institute of Education.

Printed by : State Printing Corporation, Panaluwa, Padukka.

## பங்களிப்பு

| | | |
|---|---|---|
| ஆலோசனை | : | பேராசிரியர் மஞ்சுளா விதானபதிரண<br>பணிப்பாளர் நாயகம்,<br>தேசிய கல்வி நிறுவகம். |
| | | கலாநிதி தர்சன சமரவீர,<br>பிரதிப் பணிப்பாளர் நாயகம்,<br>மொழிகள் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்,<br>தேசிய கல்வி நிறுவகம். |
| மேற்பார்வை | : | ஆர்.எம்.கே. த. சில்வா,<br>பணிப்பாளர்,<br>முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும்<br>ஆரம்பக்கல்வித்துறை,<br>தேசிய கல்வி நிறுவகம் |
| பாட இணைப்பாக்கம் | : | கனகநாதன் மகேந்திரன்,<br>உதவி விரிவுரையாளர்,<br>முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும்<br>ஆரம்பக்கல்வித் துறை,<br>தேசிய கல்வி நிறுவகம். |
| எழுத்தாக்கம் | : | லலிதாம்பிகை சண்முகநாதன்,<br>உதவிக் கல்விப்பணிப்பாளர்,<br>ஆரம்பக் கல்வி (ஓய்வு நிலை)<br>ஆரம்பக்கல்விக் கிளை, கல்வி அமைச்சு |
| | | இ. கணேசலிங்கம்<br>உதவிக் கல்விப்பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி)<br>வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம். |
| | | வானதி காண்டீபன்,<br>முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி,<br>தேசிய கல்வி நிறுவகம் |
| மொழிச் செம்மையாக்கம் | : | வி.என்.எஸ். உதயசந்திரன்,<br>பணிப்பாளர் (ஓய்வு நிலை) தமிழ்மொழித் துறை,<br>தேசிய கல்வி நிறுவகம். |
| சரவை நோக்கு | : | பேராசிரியர். விக்னேஸ்வரி பவநேசன்,<br>தலைவர்.<br>இந்து நாகரிகத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். |
| கணினி வடிவமைப்பு | : | நடேஷன் துஷாந்தன்,<br>வரைகலை வடிவமைப்பாளர்,<br>தேசிய கல்வி நிறுவகம். |
| | | ரட்ணராஜா தனுஷா,<br>வரைகலை வடிவமைப்பாளர்,<br>தேசிய கல்வி நிறுவகம். |
| சித்திரம் | : | எஸ். முரளிதரன்,<br>ஆசிரியர் (ஓய்வு நிலை)<br>ம.மா/ க. சரஸ்வதி தேசிய இந்துக் கல்லூரி,<br>புஸ்ஸல்லாவ. |



# அன்புமிகு பிள்ளைகளே

நாங்கள்.....! நாட்டின் அரிய சொத்துக்கள்,
இந்தப் புத்தகத்தைச் சிறப்பாகப் பயன்படுத்தி
மகிழ்வு, ஒத்துழைப்பு, ஒற்றுமையுடன் செயலாற்றி,
நற்பண்புகளை விருத்தி செய்து கொண்டு, சூழலை
நேசிக்கின்ற, நாட்டிற்கும் சமுதாயத்திற்கும்
பயன்மிக்க பிள்ளைகளாக உருவாக
திடசங்கற்பம் செய்து கொள்ளுவோம்.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 01 | சிவபெருமான் | 1 |
| 02 | பிள்ளையார் | 6 |
| 03 | விபூதி அணிவோம் | 9 |
| 04 | பெற்றோரே உலகம் | 10 |
| 05 | சமய வாழ்வு | 13 |
| 06 | உயிர்களுக்கு இரங்குவோம் | 16 |
| 07 | தைப்பொங்கல் | 19 |
| 08 | சின்னஞ்சிறிய மனதின் சிரத்தை | 24 |

1


# சிவபெருமான்



நாங்கள் சைவசமயத்தவர்கள்.

எமது முழுமுதற் கடவுள் சிவபெருமான்.

# அன்பே சிவம்



சிவபெருமான் எங்கும் நிறைந்தவர்.

உயிர்களுக்காக உலகைப் படைத்துக் காப்பவர்.

உயிர்களுக்கு இரங்குபவர்.

அன்பும் சிவமும் ஒன்றென்பர்

# பொருத்தமானவற்றை இணைப்போம்

சந்திரன்

கங்கை



உடுக்கை

நாகபாம்பு

திரிசூலம்

புலித்தோல் ஆடை

கமண்டலம்



2. S.P.C. 250801

2

# பிள்ளையார்



முதல் வணக்கத்திற்கு உரியவர் பிள்ளையார்

## பிள்ளையாரை வணங்குவோம்.



- விளக்கு ஏற்றுவோம்.
- பூக்களைச் சாத்தி வழிபடுவோம்.
- கற்பூர தீபம் காட்டுவோம்.
- தலைக்கு மேல் கைகளை உயர்த்தி வழிபடுவோம்.
- தோப்புக்கரணம் போட்டு வழிபடுவோம்.

# பிள்ளையாரை வழிபடும் முறையை அறிவோம்.






நெற்றியில் மும்முறை குட்டி, தோப்புக்கரணம் போட்டு பிள்ளையாரை வழிபடுவோம்.

## வகுப்பறையில் பிள்ளையாரைப் பக்தியுடன் பாடுவோம்.



“அப்பம் முப்பழம்
அமுது செய்தருளிய
தொப்பை அப்பனைத்
தொழ வினையறுமே”

# பிள்ளையார் பிடித்து வழிபடுவோம்

மஞ்சளால் பிடித்த பிள்ளையார்



சாணகத்தால் பிடித்த பிள்ளையார்



# 3

# விபூதி அணிவோம்

## விபூதி சிவசின்னங்களுள் ஒன்று







விபூதியை முறைப்படி பெற்றுக்கொள்வோம்.

**'சிவ சிவ'**
**என்று பக்தியுடன் விபூதி அணிவோம்.**

# 4

# பெற்றோரே உலகம்

## படம் பார்த்துக் கதை கூறுவோம்.









அம்மை அப்பரே உலகம்

# பெற்றோரை வணங்குவோம்.



தாயிற் சிறந்ததொரு கோவிலும் இல்லை
தந்தை சொல்மிக்க மந்திரமில்லை.

பெற்றோரை என்றும் மதித்துப் போற்றுவோம்.

அம்மா அன்புடன் உணவை ஊட்டிடுவார்.





நாம் பாடம் படிக்க அப்பா உதவிடுவார்.

பெற்றோரை வணங்குவோம்.



அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.

# 5

# சமய வாழ்வு



அதிகாலையில்
எழுவோம்.



நீராடுவோம்.



கடவுளை வணங்குவோம்.
விபூதி அணிவோம்.



தினமும்
விளக்கேற்றுவோம்.



பூக்களை வைத்து
வழிபடுவோம்.



தோத்திரம் பாடி
வழிபடுவோம்.

எந்நாளும் சைவ ஒழுக்கம் பேணுவோம்.

# நாளாந்த சமயக் கடமைகளை ஒழுங்குபடுத்தி இலக்கமிடுவோம்









# 6

# உயிர்களுக்கு இரங்குவோம்

பிராணிகளுக்கு

உணவு வழங்குவோம்.





தாகம் போக்க நீர்ச்சட்டி
அமைத்து உதவிடுவோம்.



நாம் உயிர்கள் மீது அன்பு செலுத்தினால்
இறைவன் எம்மைக் காத்திடுவான்.




# இணைப்போம்



உணவு வழங்குவோம்.



பசுவை ஆதரிப்போம்.



நீர் வழங்குவோம்.



ஆதரவு கொடுப்போம்.

எல்லா உயிர்களிலும் இறைவன் இருக்கிறார்.
நாம் உயிர்கள் மீது அன்பு காட்டுவோம்.

7

# தைப்பொங்கல்

## பொங்கல் திருநாளுக்கு ஆயத்தமாவோம்



முற்றத்தைக்
கூட்டித் துப்பரவு
செய்வோம்.




வீட்டுப்
பொருட்களைக் கழுவிச்
சுத்தம் செய்வோம்.



வீட்டை
அலங்கரிப்போம்.

## எங்கள் வீட்டில் தைப்பொங்கல்









பொங்கலைப் படைப்போம்.
சூரியனுக்கு நன்றி செலுத்துவோம்.
அயலவர்களுடன் உண்டு மகிழ்வோம்.

'நன்றி மறவோம்'

# இணைப்போம்



பூரண கும்பம்



மாவிலை



சூரியன்



கோலம்

# தைப்பொங்கல்

தைத்திருநாளில் தைப்பொங்கல்
தமிழர் மகிழும் பெரும்பொங்கல்
சூரிய தேவனை வணங்கியே நாம்
நன்றி செலுத்தும் தைப்பொங்கல்

காலை வேளை எழுந்திடுவோம்
கோலம் அழகாய்ப் போட்டிடுவோம்
தோரணம் மாவிலை கட்டிடுவோம்
பூரண கும்பம் வைத்திடுவோம்

அம்மா பொங்கல் செய்திடவே
அதனைப் படைத்து வணங்கிடுவோம்
அக்கம் பக்கம் உறவினர்க்கு
பொங்கல் கொடுத்து மகிழ்ந்திடுவோம்.




# 8

# சின்னஞ்சிறிய மனதின் சிரத்தை

பாதத்தை நிலத்தில் ஊன்றுவோம்.

நிமிர்ந்து நிற்போம்.



கவனமாக நடப்போம்.

## பாடி மகிழ்வோம்

நிலத்தில் பாதம்தனை வைத்து
நிமிர்ந்து நின்று பார்த்திடுவோம்.

சின்னச்சின்ன அடி வைத்து
மெல்லத் தரையில் நடந்திடுவோம்.

சூடும் குளிரும் உணர்ந்திடுவோம்
மென்மை கடினம் தெரிந்திடுவோம்.

செயலில் கவனம் செலுத்திடுவோம்.
சிரத்தையுடன் நாம் செயற்படுவோம்.